விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 057 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 02 செவ்வாய்க்கிழமை (14.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# பிரபாகரன் உயிருடன் நலமாக உள்ளார்

## பழ.நெடுமாறன் பரபரப்புத் தகவல்



*(சென்னை)*

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் நலமாக உள்ளார் என உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அத்தியடிப் பகுதியில் பெண் ஒருவர் அடித்துக் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடிப் பகுதியில் பெண் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கலாநிதி (வயது - 52) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் இறந்த பெண்ணின் மகள் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவிக்கையில்,

தமது வீட்டுக்கு, வீட்டு வேலைகளை செய்வதற்கும் ஆடுகளுக்கு குழைகள் வெட்டவும் என ஒருவர் வருகின்றவர் எனவும்,

11

## பிரபாகரன் உயிருடன் இல்லை

### இராணுவம் தெரிவிப்பு



(கொழும்பு)

2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி இடம்பெற்ற இறுதிப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிரிழந்து விட்டார். அவர் உயிரிழந்தமைக் கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன என இலங்கை இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்தார்.

11

## கைதடியில் விபரீத முடிவெடுத்த 14 வயது சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கைதடி கிழக்கில் விபரீத முடிவெடுத்த 14 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

11

## 15 வருடங்களின் பின்னர் 4 தமிழ் அரசியல் கைதிகளுக்கு பிணை

(கொழும்பு)

15 வருடங்களின் பின்னர் தமிழ் அரசியல் கைதிகள் நால்வருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதியான கந்தையா இளங்கோ உள்ளிட்ட 4 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு, காலி மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிணை வழங்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்து, 22 பேர் காயமடைந்தமை தொடர்பில் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 23 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக 2010ஆம் ஆண்டு காலி மேல்

11

## வவுனியாவில் ஆண் ஒருவரின் எச்சங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் ஆண் ஒருவரின் உடல் எச்சங்

11

## வாள்வெட்டு; குடும்பஸ்தர் பலி

### உருத்திரபுரத்தில் சம்பவம்

(முறிகண்டி)

வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது

இதில்அதேபகுதி

11

## யாழ்.மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் இன்று

### ஆனல்ட் ஆட்சி நீடிக்குமா?

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரவு-செலவு திட்டம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த மாநகர சபையின் ஆட்சிக்காலத்தில் ஏற்கெனவே, வரவு-செலவு திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் பதவியிழந்த இ.ஆனல்ட், 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கிறார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை நிறைவேற்ற முடியாமல், வி.மணிவண்ணன் பதவிவிலகியதை தொடர்ந்து, மீண்டும் முதல்வராகிய ஆனல்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவு நாள் அழைப்பிதழ்



மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே?
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள்
கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

**கடந்த 17.01.2023 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு**

## அமரர் சபாரத்தினம் பரஞ்சோதி

அவர்களின் 31ம் நாள் வீட்டுக் கிரியைகள் எதிர்வரும் 16.02.2023 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவர்களது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

4ஆம் வட்டாரம்
கோம்பாவில் புதுக்குடியிருப்பு. (C-5956)

இங்ஙனம் : குடும்பத்தினர்
077 088 5786

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 12 . 02 . 1950



இறப்பு 11 . 02 . 2023

எமது பாடசாலை ஆசிரியை திருமதி விஜயகௌரி
கமலதீபன் அவர்களின் தாயார்

## அமரர் சரவணை நவலட்சுமி

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

ஆசிரியர் நல்லுறவுக்கழகம்
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை (14602)

# 10 ரயில்கள் இரத்து

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாககரையோரசேவை உள்ளிட்ட 10 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொல்கஹவெல - மருதானை, மஹவ - கொழும்பு கோட்டை ஆகிய 2 ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ரம்புக்கனை - கொழும்பு கோட்டை மற்றும் குருநாகல் - கொழும்பு கோட்டை, ஹிக்கடுவ - மருதானை, அளுத்கம ஆகிய பல ரயில்களும் இரத்தாகியுள்ளன. (ம-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் வரலாற்றுப்பாட ஆசிரியர் திருமதி. அஜித்தா டானியல்
அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் கந்தவனம் அரியதாஸ்



அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் இழப்பினால் துயருற்றுள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் : 10.09.1951
மறைவு : 11.02.2023

ஆசிரியர் நலன்புரிக்கழக
யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை (14605)

# மரண அறிவித்தல்



பிறப்பு 23.06.1962

மறைவு 08.02.2023

## திரு. கதிரவேலு சிவபாதம்

யாழ். சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிட மாகவும் பிரான்ஸ் பரிசை ஐ வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவபாதம் அவர்கள் 08.02.2023 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், வடிவாம்பிகையின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரி, ஞானேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (இலங்கை), தெய்வேந்திரம் (சுவிஸ்), கோபாலசிங்கம் (கொலண்ட்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தம்பிராஜா, கார்த்திகேசு, சிவமலர் (இலங்கை), சந்திரவதனா (சுவிஸ்), வசந்தராணி (கொலண்ட்), திருமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வல்லவாம்பிகை, விஜிதரன், வினோத்தா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தந்தையும், கோமளகாந்தன், நிராஜிதா, ருசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்வியா, தயான், ஜடேன், மிலனா, றேகன், ஜெய்சன், ஜெலினா ஆகியோரின் அன்புப் பேரனும், யசோதா, றமேஸ், அனுஷா, சதீஸ், ரம்மியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜீபன், ரஜீபன், கஜனியா, வஜீபன், பவித்ரா, பகிர்சன், வினித், விதுலா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அனோஜன், வினோஜன், டினோஜன், ஹரிஷன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:- குடும்பத்தினர்
077 935 9081 (14596)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் மீண்டும் பதிவாகியுள்ள நிலநடுக்கம்

(டில்லி)

இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தில் உள்ள யுஸ்காம் நகரில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் 4.3 ரிக்டர் அளவுகோலில் பதிவாகியுள்ளதாக தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

குறித்த அதிர் வினால் அதிர்ச்சி அடைந்த மக்கள் வீடுகள் மற்றும் கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். (நி)

# தபால்மூல வாக்களிப்பிற்கு தயார் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பிற்கு தயாராகிவிட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால்மூல வாக்குகளை 22, 23, 24 ஆகிய திகதிகளில் செலுத்த முடியும். குறித்த திகதி களில் வாக்களிக்க முடியாமல் போனால், 28 ஆம் திகதி மாவட்ட தேர்தல் அத்தியட்சகர் முன் நிலையில் செலுத்தலாம் என தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கடன் மறுசீரமைப்பிற்கான உத்தரவாதங்களை சீனா வழங்க வேண்டும்- வர்த்தக சம்மேளனம்

(கொழும்பு)

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளிற்கான நிதி உத்தரவாதங்களை சீனா வழங்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிக்காக இலங்கைக்கு கடன்வழங்கிய நாடுகள் வழங்கியுள்ள உத்தரவாதங்களை வரவேற்றுள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம் சீனாவிடமிருந்து இதே போன்ற உத்தரவாதங்களை எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் வழங்கியுள்ள உத்தரவாதத்தை சர்வதேச நாணயநிதியம் பரிசீலிக்க வேண்டும் எனவும் இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் துரித அனுமதி கிடைப்பதற்கு ஏற்ற வகையில் சீனாவும் ஏனைய உலக நாடுகளும் நிதி உத்தரவாதத்தை வழங்க வேண்டும் எனவும் இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி)

# இந்தியாவிற்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் இலங்கை ஈடுபடாது

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி

(கொழும்பு)

இந்தியாவின் நலன்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தாமல் இலங்கை சீனாவுடன் இணைந்து செயற்படும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான இலங்கையின் வலுவான உறவு அதன் நாகரீகத்தின் ஒரு பகுதி என தெரிவித்துள்ள அலி சப்ரி இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கைகளிற்கும் இலங்கை தனது மண்ணில் அனுமதியளிக்காது என தெரிவித்ததாக டைம்ஸ் நவ் தெரிவித்துள்ளது.

இந்தியா கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவு மிகவும் வலுவானது அது எங்கள் நாகரீகத்தின் ஒரு பகுதி என குறிப்பிட்டுள்ள அலிசப்ரி எங்கள் பிராந்தியத்தில் இந்தியாவின் நலன்களிற்கு பாதி



ப்பை ஏற்படுத்தும் எந்த செயலிலும் நாங்கள் ஈடுபடமாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவும் எங்கள் நண்பன். நாங்கள் அவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், எனினும் இந்தியாவின் நலன்களிற்கு பாதிப்பு ஏற்படாது இந்திய அரசாங்கத்திற்கு நாங்கள் இதனை தெளிவாக தெரிவித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# சமஷ்டியை வழங்க முடியாது; ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு

## விடாப்பிடியாய் இருக்கும் அரசாங்கம்

(கொழும்பு)

**சமஷ்டி தீர்விற்கு நாட்டில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில் அதனை ஒரு போதும் வழங்க முடியாது. தமிழ்த் தலைவர்களும் அதனைக் கேட்க வேண்டாம் என இராஜாங்க அமைச்சர் கே.டபிள்யூ. சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.**

சமஷ்டி தீர்வு தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் அன்றிலிருந்து இன்று வரை அரசியல் தீர்வைக் கோரி வருகின்றனர், அதனால்தான் நாட்டின் ஜனாதிபதி வடக்கு நோக்கிச் செல்லும் போதெல்லாம் அங்கே ஆர்ப்பாட்டங்கள் ஏற்படுகின்றன.

தமிழ் மக்கள் கோரும் அரசியல் தீர்வு கண்டிப்பாக வழ



ங்கப்பட வேண்டும். அதுவும் ஒற்றையாட்சிக்குள் அதிகாரம் பகிரப்படுவதையே நாங்கள் விரும்புகின்றோம்.

பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட மாட்டாது எனவும் நாட்டைப் பிளவுபடுத்த இடமளிக்க முடியாது எனவும் ஜனாதிபதிரணில் கோரி வரும் நிலையில், தமிழ் அரசியல் தலைவர்கள் சிலர் அதற்கு எதிராக கதைத்து வருகின்றனர்.

தமிழ் அரசியல் தலைவர்கள் தொடர்ந்து அரசியலில் இருப்பதற்காகவே வழங்கப்பட முடியாத சமஷ்டி தீர்வைக் கேட்டு வருகின்றனர்.

நாம் ஒற்றையாட்சிக்குள் தீர்வை வழங்கத் தயாராக உள்ளோம் என இராஜாங்க அமைச்சர் கே.டபிள்யூ. சாந்த பண்டார தெரிவித்துள்ளார். (நி)

# சுமனரத்ன தேரரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

அம்பிட்டிய சுமன ரத்ன தேரரின் இருப்பிடத்தை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலையளவில் இடம் பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

துப்பாக்கிச்சூடு இடம் பெற்ற வேளையில் அவர் அறைக்குள் இருந்ததாகவும் இந்த சம்பவத்தில் சுமன ரத்ன தேரருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமன ரத்ன தேரர், மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம விகாரை மற்றும் கெவிலியாமடு சுமன ரத்ன ஆகிய விகாரைகளின் விகாராதிபதி என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# வரிகளை வசூலிக்க தயாராகும் அரசு

(கொழும்பு)

செலுத்தப்படாமல் உள்ள சுமார் 200 பில்லியன் ரூபாய் வரிகளை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்க தயார் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (நி)

# ஜனநாயகத்தை உறுதி செய்ய தேர்தல்கள் அவசியம் -எரான்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு இந்த ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தற்போதைய சூழ்நிலையை வல்லுநர்கள் பலர் நெருக்கடியாக அடையாளப்படுத்துகின்றனர்.

நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் மாற்றங்களை அரசு கருத்தில் கொள்ளத் தவறியுள்ளது. நெருக்கடி காலங்களில் நிலைத்தன்மையை உருவாக்குவதே நிர்வாகத்தின் வழியாக இருக்க வேண்டும்.

அரசு பொருளாதாரத்தை தன்னிச்சையாக நிர்வகிக்கின்றது. ஒரு நாட்டின் ஜன நாயகக் கட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். அதேவேளை, ஜனநாயகம் நிலவுவதை உறுதி செய்வதற்கு உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

# நிதி வழங்காவிட்டால் நீதிமன்றை நாடுவோம்

## பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்குத் தேவையான மொத்த நிதியை, நிதி அமைச்சினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்காவிட்டால் அது தொடர்பில் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துவோம் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை நிதி அமைச்சினால் இதுவரை வழங்காமல் இருப்பது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு செலவாகும் பணத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குவது நிதி அமைச்சின் கடமையாகும். இந்த நிதியை ஒரே தடவையில் தேர்தல் ஆணைக்குழு கோரியதில்லை. என்றாலும் இந்த வருடத்துக்கான வரவு- செலவு திட்டத்தின் போது ஒதுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிதியை தேர்தல் ஆணைக்குழுவுக்கு பெற்றுக்கொடுப்பது நிதி அமைச்சின் பொறுப்பாகும்.

அதனால், தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக் குழுவினால் கோரப்பட்டுள்ள உரிய பணத்தை நிதி அமைச்சினால் ஆணைக்குழுவுக்கு வழங்காவிட்டால் அது தொடர்பாக நீதிமன்றத்தை நாடுவோம் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி யாழ். மாவட்ட அணி சம்பியன்





நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மற்றும் தம்புள்ளை மாவட்ட இளையோர் அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த போட்டி இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மாவட்ட அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்களை பெற்றது.

யாழ்.அணிசார்பாக அணித் தலைவர் டிலக்சன் 38 ஓட்டங்களையும் விணோஜன் 31 ஓட்டங்களையும் கஜானன் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் தம்புள்ளை அணி சார்பில் சிந்திஜ மற்றும் சங்கல்ப தலா 3 விக்கெட்டுகளை அதிகபட்சமாக கைப்பற்றனர். 134 என்கின்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை அணி 19.1 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. இதனால் 11 ஓட்டங்களால் யாழ்ப்பாண அணி வெற்றிபெற்றது.

தம்புள்ளை அணி சார்பாக ஹரித்த 25 ஓட்டங்களையும் ஷியாட் 20 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாண அணி சார்பில் கவிசன் 3 விக்கெட்டுகளையும், சரன் மற்றும் மதுசன் தலா 2 விக்கெட்டுகளையும் அதிகபட்சமாக கைப்பற்றினர்.

போட்டியின் சிறந்த வீரனாக யாழ்ப்பாண அணி தலைவர் டிலக்சன் தெரிவு செய்யப்பட்டார். நிகழ்வின் இறுதியில் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த விளையாட்டு நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அ.உமா மகேஸ்வரன், வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (433-104)

# மாசி மாத இராசி பலன்கள் 13.02.2023-14.03.2023

## மேஷம்

**வேகத்தோடும் விவேகத்தோடும் செயற்படும் மேஷ இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ஜென்மத்தில் இராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கம் இருக்கிறது. விரய ஸ்தானத்தில் குரு இருப்பதால், விரயங்கள் அதிகரிக்கும். என்றாலும் அதற்கேற்ப வருமானமும் வந்துசேரும். குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவதால் தாய் வழி ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மாற்று மருத்துவத்தின் மூலம் உடல்நலத்தை சீராக்கிக் கொண்டு சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். வீட்டில் மங்கல ஓசை கேட்கும் சூழல் உருவாகும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு தன ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும்பொழுது, பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். பழைய பாக்கிகளை கொடுத்து மகிழ்வீர்கள். வாழ்க்கைத் துணையின் உத்தியோகம் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியாகும். குடும்பத்தில் உதிரி வருமானங்கள் வந்துசேரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வெளிநாடு சம்பந்தமான முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு, சகோதர-சகாய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். நீதிமன்ற வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உங்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மாசி 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். 6 இற்கு அதிபதியான புதன், 12 ஆம் இடத்தில் நீச்சம் பெறுவது யோகம்தான். மேலும் குருவோடு புதன் சேர்வதால், "நீச்சபங்க ராஜயோகம்" ஏற்படுகிறது. அது மட்டுமின்றி "விபரீத ராஜயோக" அடிப்படையிலும் பல நல்ல சம்பவங்கள் நடைபெறும். பொருளாதார வசதி பெருகும். வாகனம் வாங்கும் யோகம் முதல் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து யோகமும் வந்து சேரும். வரன்கள் முடிவாகி மகிழ்ச்சியை வழங்கும்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 29 ஆம் திகதி, உங்கள் இராசிக்கு சுக்கிரன் வருகிறார். தனாதிபதியான சுக்கிரன், உங்கள் இராசிக்கு வரும்போது தன வரவு திருப்திகரமாக இருக்கும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். குடும்ப முன்னேற்றம் கூடும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. பெண் பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, எடுத்த முயற்சி வெற்றிபெறும். பிரிந்து சென்ற உறவினர்கள் பிரியமுடன் வந்திணைவர்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மார்ச் 30 ஆம் திகதி மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இக்காலத்தில் மிக மிக கவனம் தேவை. குறிப்பாக ஆரோக்கியத்திலும் அதிகார வர்க்கத்தினருடன் பழகும் பொழுதும் பிரச்சினைகள் உருவாகலாம். மிதுனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், மகரத்தில் சஞ்சரிக்கும் சனியைப் பார்ப்பதால் திடீர் திடீரென மாற்றங்கள் ஏற்படலாம். பணிபுரியும் இடத்தில் வீண்பழி வந்துசேரலாம். விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் பற்றி சிந்திப்பீர்கள். சுய ஜாதக அடிப்படையில் வழிபாடுகளை மேற்கொண்டால் நல்லது நடக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து உதிரி வருமானம் கிடைக்கலாம். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். மாதக் கடைசியில் விரயங்கள் கூடுதலாக இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு, அலுவலகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. சக பணியாளர்களின் ஆதரவும் திருப்தி தரும்.

## ரிஷபம்

**விடாமுயற்சியால் வெற்றியை எட்டிப்பிடிக்கும் ரிஷப இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே விரயாதிபதி செவ்வாய் வீற்றிருக்கிறார். எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடும். இருப்பினும் லாபாதிபதி குரு, இலாப ஸ்தானத்தில் இருப்பதால் விரயம் வருவதற்கு முன்னதாகவே வரவு வந்துசேரும். சேமிக்க இயலாமல் போனாலும் செயற்பாடுகளில் வெற்றி உண்டு. மாதத் தொடக்கத்தில் 6 இல் கேதுவும் 12 இல் இராகுவும் இருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களுக்கு எதிராகச் சிலர் செயற்பட்டு உங்கள் முன்னேற்றத்தை தடுக்க நினைக்கலாம். இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவதால் சகோதர ஸ்தானம், புத்திர ஸ்தானம், களத்திர ஸ்தானம் பலப்படுகிறது. எனவே உடன்பிறப்புகளின் உதவியோடு ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடக்கலாம். கல்யாண முயற்சிகள் கைகூடும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். அதோடு உங்கள் இராசிநாதனாகவும் விளங்கும் சுக்கிரன், லாப ஸ்தானத்தில் உச்சம் பெறுவதால் இது ஒரு பொற்காலமாக அமையும். எதை எந்த நேரத்தில் செய்ய நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் பல நடைபெறும். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அரசு வேலைக்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தால், அது பலன் தரும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். பிள்ளைகளின் மேற்படிப்பு மற்றும் வேலை சம்பந்தமான வெளிநாடு முயற்சி கைகூடும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மாசி 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். தனாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வருமானப் பற்றாக்குறை ஏற்படும். "வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படுகின்றதே" என்று கவலைப்படுவீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. கொள்கைப் பிடிப்போடு செயற்பட முடியாது. புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டினாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்வதில் சிக்கல்கள் உருவாகும்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிநாதன் சுக்கிரன், மாசி 29 ஆம் திகதி விரயஸ்தானத்திற்குச் செல்கிறார். இக்காலத்தில் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துங்கள். குறிப்பாக இடம், பூமி விற்பனை நடைபெறும். இனிய உறவுகள் பகையாகலாம். கடுமையாக முயற்சித்தாலும், காரியம் கடைசி நேரத்தில்தான் கைகூடும். ஆரோக்கியத் தொல்லை உண்டு. ஆதாயம் தராத பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். வெளிநாட்டிற்கு வேலை தேடிச் சென்றவர்களுக்கு பிரச்சினை ஏற்படலாம்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மார்ச் 30 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. மிதுனத்தில் உள்ள செவ்வாய், மகரத்தில் உள்ள சனியைப் பார்ப்பதால் வாக்குவாதம் உண்டாகும். தேவையற்ற வழியில் வருமானம் செலவாகும். குடும்பப் பிரச்சினை அதிகரிக்கும். கொடுக்கல் - வாங்கல்களில் ஏமாற்றம் ஏற்படும். பொருளாதாரத்தில் தேக்க நிலை வரலாம். தெளிந்த மனத்தோடு செயற்பட இயலாது. இந்த கால கட்டத்தில் யோக பலம் பெற்ற நாளில் அங்காரக வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உச்சம் பெறுவதால், பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். சுபகாரியங்களுக்காக அதிகம் செலவிடுவீர்கள். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் வந்து மகிழ்விக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்தை தாக்கிய புயல்

- 5 பிராந்தியங்களில் அவசரநிலை பிரகடனம்
- 58,000 வீடுகளுக்கு மின்துண்டிப்பு
- விமானப் பயணங்கள் ரத்து

நியூஸிலாந்தில் நேற்று தாக்கிய புயல் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் மின்சாரத்தை இழந்துள்ளனர். அத்துடன் நூற்றுக்கணக்கான விமானப் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

புயல் காரணமாக, கடும் மழை பெய்ததுடன், மரங்கள் வீழ்ந்ததால், 58,000 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன், கட்டடங்களும் வீதிகளும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்தின் வட தீவிலுள்ள 5 பிராந்தியங்களில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்நாட்டின் 4.1 மில்லியன் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அப்பிராந்தியங்களில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பணம் இல்லாமையால் வர மறுத்த அம்புலன்ஸ் தள்ளுவண்டியில் தந்தையை உருட்டிச் சென்ற சிறுவன்



(டில்லி)

பணம் இல்லை என்ற ஒரே காரணத்தால் அம்புலன்ஸ் வர மறுத்தமையால், நெஞ்சு வலியால் கடுமையாக அவதிப்பட்ட தனது தந்தையை 7 வயது மகன் தள்ளுவண்டியில் வைத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பரிதாபச் சம்பவம் இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஏழை மக்களின் பொருளாதார நிலைமைகளினை கருத்திற்கொண்டு இலவசமாக கொண்டு வரப்பட்ட அம்புலன்ஸ் சேவைக்காக தற்பொழுது பணம் கேட்கும் நிலைமை உருவாகி இருப்பதே இந்த அவலத்திற்கு காரணம் என கூறப்படுகின்றது.

இந்நிலையில், சிறுவன் தனது தந்தையை தள்ளுவண்டியில் கொண்டு செல்லும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவியுள்ளமையினால் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பிதழும்

கடந்த 15.01.2023 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர். முருகேசு மனோகரன்

(முன்னைநாள் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்)
(உரிமையாளர் M.முருகன் multishop பருத்தித்துறை)



அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று(14.02.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் "கதிர மலை வாசம்" புலோலி மேற்கு கிராமக்கோடு பருத்தித்துறையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு பற்றி சிறப்பிக்கும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம். இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். (சி-5958)

"கதிர மலை வாசம்"
புலோலி மேற்கு,
கிராமக்கோடு.

இங்ஙனம்-
முருகதாஸ்(மகன்)-0041792367235
சுமதி(மகள்)-0233781114318
அரிய மலர் (மனைவி)-0212265621
தயானந்தன்(பெறாமகன்)-0773443034



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை துணைவேந்தர் பதவி

வலம்புரி செய்தித்தாளில் வெளிவந்த துணைவேந்தர் பதவி குறித்த 27.01.2023 திகதியிடப்பட்ட விளம்பரத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள்/ பெயர்மொழிவுகளுக்காக கோரும் விளம்பரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க ரத்து செய்யப்படுகிறது. துணைவேந்தர் பதவிக்கான நியமனம் தொடர்பான செயல்முறை புதிதாக தொடங்கும். மேலதிக விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

விசுவநாதன் காண்டீபன்
பதிவாளரும் பேரவையின் செயலாளரும்
பதிவாளர் அலுவலகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
(சி-5957)


# இராசிபலன்

14.02.2023
மாசி 02, செவ்வாய்க்கிழமை
நவமி பின்னிரவு 2.59 மணிவரை

அனுசம் முன்னிரவு 9.44 மணிவரை
சுபநேரம் 11.03-12.33 மணிவரை
இராகுகாலம் 3.33-5.03 மணிவரை

சந்திராஷ்டமம் -பரணி, கார்த்திகை
உலக காதலர் தினம்,

வளவன்

**மேஷம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கடகம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**ரிஷபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன சுகமுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு குதூகலம் தரும், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப காரியங்கள் கூடும் நாள்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.

மெழுகுவர்த்தி உருகும் வரைதான் வெளிச்சம் நம்பிக்கை இருக்கும் வரைதான் நட்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கலாசார மண்டபம் எம்மை பிராந்திய வரலாற்றுடன் இணைத்துள்ளது

## வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கலாசார மண்டபம் கலைகள், நம்பிக்கைகள் மற்றும் கலாசாரம் என்பவற்றைக் கொண்டாடும் வகையில் பிராந்திய வரலாற்றுடன் இணைக்கப்பட்டமையை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன் என வட மாகாண ஆளுநர் ஜீவன்தியாகராஜா தெரிவித்தார்.

இந்தியா நிதி உதவியின் கீழ் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கையளிக்கும் நிகழ்வில் வரவேற்புரையை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பிரதேசத்தில் பலவிதமான கலாசாரங்களிலிருந்து மிக அதிகமான கட்டடக்கலை வேலைகள் எமக்குக் கிடைத்துள்ளன.

புராதன நகரங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான விதைகள் எம்மிடம் கிடைத்துள்ள நிலையில் இந்நன்கொடையை எமக்கு வழங்கியமைக்காக நாம் இந்திய அரசிற்கும் மக்களுக்கும் நன்றி உடையவர்களாக இருக்கின்றோம்.

இக்கொடையானது கலை உலகத்துடன் எம்மை இணைப்பதுடன் அவை நாட்டின் வளர்ச்சியைத் தூண்டும் மிகப் பெரிய வளத்தேக்கங்களாகும் எனத் தெரிவித்தார். (4-6-104)

# மகா சிவராத்திரியை முன்னிட்டு கேதீச்சரம் நோக்கி பாதயாத்திரை



(அராலி)

யாழ். மாவட்ட சிவன் ஆன்மிக சபையின் ஏற்பாட்டில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நேற்று முன்தினம் திருக்கேதீச்சர பாதயாத்திரை, செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து மன்னார் திருக்கேதீச்சர நாதரை நோக்கிச் சென்றது.

யாழ். மாவட்ட சிவன் ஆன்மிக சபையின் தலைவர் சீத்தாராமன் சிவமைந்தன், செயலாளர் வ.வாகீசன் மற்றும் யாழ். அறநெறி பாடசாலையின் மாணவர்கள் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். (4-6-104)

# யாழ்.மத்திய கல்லூரி தரம் 6 இற்கான அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 110 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு தரம் 6 இற்கான அனுமதி விண்ணப்பங்கள் 20.02.2023 ஆம் திகதி முதல் பாடசாலை நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு JCC Edu Care Trust மூலம் விசேட புலமைப்பரிசில் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்பட்டு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.(4-6)

## சோதிட களஞ்சிய நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சோதிட களஞ்சியம் பகுதி I,II நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம், சீனியர் வீதி, கலட்டி எச்சாட்டிமகாமாரி தேவஸ்தான திருமண மண்டபத்தில் சுதேச மருத்துவர் ஜெ.ஜெயலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் மற்றும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி. ந.ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6-33)

# நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் சோ.பத்மநாதனின் மூன்று நூல்கள் நாளை புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் வெளியிடப்படவுள்ளது.

இதில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "நரகொடு சுவர்க்கம்" ஆங்கிரத்திலும் தெலுங்குக் கவிஞர் கோபியின் குறுங்கவிதைகள் தமிழிலும் சோ.பத்மநாதனின் ஆங்கிலக் கவிதை தொகுப்பு ஒன்றும் வெளியிடப்படவுள்ளன.

இந்நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, கலைப்பீடாதிபதி எஸ்.ரகுராமும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)




**சயானா**

உங்களை யாராவது நிராகரித்தால் கவலைப்படாதீர்கள். பெரும்பாலும் மக்கள் விலையுயர்ந்தவற்றைத்தான் வாங்க இயலாமல் நிராகரிக்கிறார்கள்

**சர்மிலா**




கவலைகள் வந்து கொண்டுதான் இருக்கும் அதற்காக அதை சிம்மாசனம் போட்டு உட்கார வைக்கக் கூடாது

**மகிழினி**

26 எழுத்துக்கள் தெரிந்தவன் துணிந்து பேசுகின்றான். 247 எழுத்துக்கள் தெரிந்தவன் பணிந்து போகின்றான்.

**ஆருத்ரன்**



என்னிடம் சிறப்பான தனித்திறமை என்று எதுவுமே இல்லை. என்னிடம் இருப்பது ஆர்வம் மட்டுமே -ஐன்ஸ்டீன்

**நிஷா**

முடியும் எனச் சொல்வது பெரிதல்ல. எதையும் முயன்று முடித்துக் காட்ட வேண்டும்.

**ராகுல்**



உங்கள் கனவு வெற்றி அடையாது முட்டாள்த் தனமானது என்று யார் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளாதீர்கள் -ஜாக் மா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ/த பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணி உடனே ஆரம்பம்

## பரீட்சை ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)
க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் எவ்வித மோசடிகளும் இடம்பெறவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மின்சாரத் தடை உள்ளிட்ட சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பரீட்சை முறைகேடுகள் அல்லது வேறு முறைப்பாடுகள் இன்றி இம்முறை பரீட்சை நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளார்.

வரையறுக்கப்பட்ட மாணவர்கள் மட்டும் தோற்றும் பரீட்சைகள் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் 17 ஆம் திகதி உயர்தரப் பரீட்சை நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



# சேவையில் ஈடுபடுத்துமாறு பட்டதாரிகள் போராட்டம்




(கொழும்பு)
ஆசிரிய சேவைக்கான கூடிய தகுதியுடைய பட்டதாரிகளை காலம் தாழ்த்தாது ஆசிரிய சேவைக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும் என கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் கல்வியலாளர்கள் பட்டதாரிகள் ஒன்றியம் மற்றும் இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தினரால் பத்தரமுல்லை இசுறுபாய கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது. (நி)

# அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகள் புதன்கிழமை முதல் விநியோகம்

## பிரதி அஞ்சல்மா அதிபர்

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பு முத்திரையிடப்பட்ட பொதிகளை நாளை முதல் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 36000 அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு குறைபாடுகள் காரணமாக குறித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# அந்நியச் செலாவணி கையிருப்பு 2 பில்லியன் டொலரை எட்டியது

(கொழும்பு)
ஜனவரியில் இலங்கை அந்நியச் செலாவணி கையிருப்பு இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

பல இறுக்கமான நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு வருவாய் என்பனவற்றின் அடிப்படையில், இலங்கையின் அந்நியச் செலாவணி நிலைமை படிப்படியாக முன்னேற்றம் அடைந்துள்ளது. (நி)

# சுமார் 30 ஆயிரம் ஆசிரியர்கள் பற்றாக்குறை

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)
பாடசாலைகளில் சுமார் 30,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அச்சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், கல்வியியற் கல்லூரிகளில் பயிற்றப்பட்ட சுமார் 8,000 பேர் வெளியேறியுள்ளனர்.

எனினும், அவர்களை முறையாக பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான உரிய திட்டம் கல்வி அமைச்சிடம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## சர்வதேச நாணய நிதியத்தின்

# கடன்தொகை கிடைத்தால் டொலரின் பெறுமதி குறையும்

## முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த

(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகை தவணை முறையில் பெறப்படும் எனவும் அந்தத் தொகை கிடைத்தவுடன் இலங்கையில் டொலரின் பெறுமதி குறைவடையும் எனவும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இவ்வருட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாவலப்பிட்டி நகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நாவலப்பிட்டி நகரசபையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே மஹிந்தானந்த அளுத்கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் அரசாங்கத்தை மாற்ற முடியாது. தற்போதைய அரசாங்கம் இன்னும் இரண்டரை வருடங்கள் ஆட்சியில் இருக்கும்.

தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்போதும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு குறையும் என அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா:சூரி 2 செவ் 3 இல்
தகைமை/தொழில்:A/L (கணினி வல்லுநர்)
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/13337

பிறப்பு:1987 கிறிஸ்தவம் (RC)
நட்சத்திரம்: அனுசம் 1
கி.பா:சூரி 11 செவ் 12 இல்
தகைமை/தொழில்: BBA பட்டதாரி அலுவலக உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் பதிவு திருமணத்தோடு விவாகரத்தானவர்
தொ.இ: B/13338

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை 4
கி.பா:சூரி 6 செவ் 5 இல்
உயரம்: 162 cm
தகைமை/தொழில்: A/L பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13341

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 22 ½ சூரி 11 செவ் 2 இல்
உயரம்:5' 2"
தகைமை/தொழில்:A/L மாலுமி
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/13343

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரம் 4
கி.பா:44 சூரி 6 செவ் 4 இல்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:நிரந்தரதொழில் கணவனை இழந்தவர்
தொ.இ:G/13360

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா:53 ½ சூரி 11 செவ் 2 இல்
உயரம்:5' 3"
தகைமை/தொழில்:BBST இறுதி ஆண்டு
எதிர்பார்ப்பு:பட்டதாரி வெளிநாடு மட்டும்
தொ.இ:G/13366

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 3
கி.பா:22 சூரி 6 செவ் 4 இல் உயரம்:158 cm
தகைமை/தொழில்: BSc,MSc ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வங்கியாளர், பொறியியலாளர், ஆசிரியர்
தொ.இ: G/13370

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா:சூரி 8 செவ் 9 இல்
உயரம்: 159 cm
தகைமை/தொழில்: MBBS வைத்தியர்
எதிர்பார்ப்பு: உயர்பதவிவெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ:G/13373

கல்யாணமாலை
இல. 144, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 102





## இருபத்து மூன்றாம் அத்தியாயம்
## அமுதனின் அன்னை

வேளக்கார வீரர் படை பெரிய கடை வீதியின் வழியாகப் போயிற்று. படையின் கடைசியில் சென்ற சில வீரர்கள் கடைத்தெருவில் சில திருவிளையாடல்களைப் புரிந்தார்கள். ஒருவன் ஒரு பட்சணக் கடையில் புகுந்து ஒரு கூடை நிறைய அதிரசத்தை எடுத்துக் கொண்டு வந்து மற்ற வீரர்களுக்கு விநியோகித்தான்.

பிறகு வெறும் கூடையைக் கடைக்காரனுடைய தலையிலே கவிழ்த்த போது, வீரர்களும் வீதியில் சென்றவர்களும் 'ஹ்ஹஹ்ஹ ஹ்ஹா' என்று இரைந்து சிரித்தார்கள். இன்னொரு வீரன் வழியில் எதிர்ப்பட்ட ஒரு மூதாட்டியின் கையிலிருந்த பூக்கூடையைப் பிடுங்கினான்.

பூவையெல்லாம் வாரி இறைத்துக் கொண்டே "பூமாரி பொழிகிறதடா!" என்றான். அவன் வாரி வீசிய பூக்களைப் பிடிக்க முயன்ற வீரர்கள் குதித்தும் சிரித்தும் கொம்மாளமடித்தார்கள். எதிரில் வந்த ஒரு மாட்டுவண்டியை இன்னொரு வீரன் நிறுத்தி, மாட்டை வண்டியிலிருந்து பூட்டு அவிழ்த்து விரட்டி அடித்தான். மாடு மிரண்டு மக்கள் கூட்டத்திடையே புகுந்து சிலரைத் தள்ளிக் கொண்டு ஓடியது. மீண்டும் ஒரே கோலாகலச் சிரிப்புத்தான்!

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன், "ஆகா! பழுவேட்டரையரின் வீரர்களைப் போல் இவர்களும் விளையாடுகிறார்கள். இவர்களுடைய விளையாட்டு மற்றவர்களுக்கு வினையாக இருக்கிறது. நல்லவேளை, இவர்களுடைய பார்வை நம் மீது விழாமல் ஒதுங்கி நின்றோம். இல்லாவிடில் ஒரு சண்டை ஏற்பட்டிருக்கும். வந்த காரியம் கெட்டுப் போயிருக்கும்" என்று எண்ணிக் கொண்டான்.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசமும் அவனுக்குப் புலனாயிற்று. வேளக்காரப் படை வீரர்களின் விளையாடல்களை இங்குள்ள ஜனங்கள் அவ்வளவாக வெறுக்கவில்லை.

அவர்களுடைய கொம்மாளத்தில் ஜனங்களும் சேர்ந்து சிரித்துக் குதூகலித்தார்கள்! இதைப் பற்றிக் கேட்கலாம் என்று திரும்பிப் பார்த்த போது பூக்குடலைகளுடன் நின்ற சிறுவனை வந்தியத்தேவன் காணவில்லை.

கூட்டத்திலும் கோலாகலத்திலும் அந்த வாலிபன் எங்கேயோ போய் விட்டான். ஒருவேளை அவனுடைய வேலையைப் பார்க்கப் போயிருக்கக் கூடும்.

வேளக்காரப் படை மாலையில் கோட்டையிலிருந்து வெளியேறிய பிறகு மற்ற யாரையும் உள்ளே விடுவதில்லையென்று வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். இரவு பகல் எந்த நேரத்திலும் கோட்டைக்குள் பிரவேசிக்கும் உரிமை பெற்றவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அமைச்சர்களும் தண்டநாயகர்களுந்தான்.

பழுவேட்டரையர்களின் குடும்பத்தாருக்கும் அவ்வுரிமை உண்டு என்று வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான். எனவே, இராத்திரியே கோட்டைக்குள் போக வேண்டும் என்ற உத்தேசம் அவனுக்கு மாறி விட்டது.

தன்னிடமிருந்த இலச்சினை மோதிரத்தைக் காட்டிச் சோதனை செய்ய வந்தியத்தேவன் விரும்பவில்லை. அதை விட இரவு கோட்டைக்கு வெளியிலேயே தங்கி நகரைச் சுற்றிப் பார்த்து விட்டு நாளை உதயத்துக்குப் பிறகு கோட்டைக்குள் செல்வதே நல்லது.

இராத்திரியில் அப்படியே கோட்டைக்குள் பிரவேசித்தாலும் அரசரைத் தரிசித்து ஓலை கொடுப்பது இயலாத காரியமேயல்லவா?

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்



### ஆசனோஷ்ணம்

(நேற்றைய தொடர்ச்சி)

பரமார்த்த குரு குதிரையிலிருந்து பள்ளத்தில் விழுந்ததற்குப் பின்னர் பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அவர் உடலில் பட்ட அடியைவிட உள்ளத்தில் பட்ட அடியே பலமாக இருந்தது. நாளுக்கு நாள் அவர் உடல் மோசமாகி வந்தது. கவலை அதிகரித்துக் கொண்டே இருந்தது.

அந்த வேதியன் சொன்ன ஆரூடம் அவர் நினைவுக்கு வந்து பயமுறுத்திக் கொண்டேயிருந்தது. அதை நினைக்கக் கூடாது என்று தான் நினைப்பார். அப்படி நினைக்கிற போதே அந்த நினைப்பு வந்து நெஞ்சைப் பிசையும்.

பள்ளத்திலேயிருந்த பரமார்த்த குருவைத் தூக்கி, சுத்தம் செய்து மீண்டும் குதிரையின் மேல் ஏற்றிய போது அவருடைய இருப்பிடம் (ஆசனம்) குளிர்ந்திருந்ததைக் கவனித்து விட்டார் அவர். ஒரே கவலையாகப் போய் விட்டது. சிஷ்யர்களுக்கும் சொல்லாமல் வேதனைப்பட்டார் குரு. அவர்கள் ஒரேயடியாக அதை மறந்து விட்டவர்கள் போல் தோன்றினார்கள். நினைவுபடுத்தி அவர்களையும் கவலைக்குள்ளாக்குவானேன் என்று கருதினாரோ என்னவோ? மடத்துக்குப் போய் சேர்ந்த போதும் அவர் அதைப்பற்றி அவர்களிடம் சொல்லவே இல்லை.

அன்றிரவு அவருக்கு உறக்கம் வரவில்லை. உடலில் வலி! தள்ளாத வயதில் பள்ளத்தில் விழுந்தால் தாங்க முடியுமா? ஆனால் அவர் பள்ளத்தில் விழுந்ததால் உடம்பு அதிர்ந்து போய் வலி எடுக்கிறது என்று நினைத்ததை விட ஆருடக்காரர் சொன்னது பலிக்கும் காலம் வந்து விட்டதோ என்று பயந்ததுதான் அதிகமாக இருந்தது. அதற்கு ஏற்றால் போல் ஆசனம் வேறு சீதமாக அதாவது நனைந்து குளிர்ந்து காணப்பட்டது. சேறும் சகதியுமாக இருந்த பள்ளத்தில் விழுந்ததனால் அப்படி ஆயிற்று என்ற நினைப்பே அவருக்கு வராது போயிற்று.

இரவெல்லாம் உருண்டு புரண்டு படுத்தார். ஒரு நிமிடம் உறங்கவில்லை. பயம், வெறுப்பு, பெருமூச்சு... இப்படியே கிடந்தார். பொழுதும் விடிந்தது. குருநாதர் சிஷ்யர்களை விளித்தார்.

அவர்கள் ஓடோடி வந்து குருவின் அருகே கவலையோடு நின்றார்கள். அவருடைய கண்கள் குழி விழுந்தும் பஞ்சடைந்தும் முகம் வாடி வதங்கி வெளுத்துப் போயும் உதடுகள் வறண்டு நாக்கில் கொஞ்சமும் ஈரப்பசையே இல்லாமலும் உருமாறி மரண அவஸ்தையோடு கிடப்பதாக அவர்கள் பயந்தார்கள்.

குருநாதர் வாயை மெதுவாகத் திறந்து பேசிய போது அவர் நா குழறியது. ஆகவே அவர்களுக்கு அவர் என்ன சொல்கிறார் என்பது விளங்கவில்லை. அவருக்கு மேல்மூச்சு வாங்குவதைக் கண்டு அவர்களுக்குத் தங்கள் மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
~ விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்கான கோரிக்கை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த மத்திய அமைச்சர் முருகன் மற்றும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்திய மத்திய அமைச்சர் முருகன் மற்றும் அண்ணாமலை ஆகியோரிடம் விடுக்கப்பட்ட இக்கோரிக்கை மிகவும் அவசியமானது என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

உண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அண்ணாமலையிடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என்று கேட்பதிலும் பார்க்க, பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள் எனக் கேட்பதே பொருத்தமானதாகும்.

தவிர, இலங்கையின் சமகால சூழ்நிலையில் தமிழ் அரசியல் தலைவர்கள் பிரதமர் மோடியை அவசியம் சந்தித்தாக வேண்டும்.

பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் கிடைத்திருந்தது.

பிரதமர் மோடி கொழும்புக்கு வந்தபோது; இந்தியாவுக்கு வாருங்கள். அங்கு சந்திப்போம். கதைப்போம் என தன்னைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியிருந்தார்.

இதற்கு மேலாக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுடன் பேசுவதற்கு பிரதமர் மோடி ஏலவே சந்தர்ப்பம் கொடுத்திருந்தார்.

ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தை நம்மவர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

உண்மையில் பிரதமர் மோடியை தமிழ் அரசியல் தலைவர்கள் சந்தித்து இங்குள்ள நிலைமைகளை எடுத்துக்கூறி இருக்க வேண்டும்.

ஆனால் அதனைச் செய்வதற்கு அவர்கள் தயார் இல்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், இந்திய மத்திய அரசின் அண்மைக்காலப் போக்கில் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளதை உணர முடிகிறது.

அதாவது ஈழத் தமிழர் விடயத்தில் இலங்கை அரசாங்கத்துடன் இசைந்து செல்வது போன்ற தோற்றப்பாடு வெளிப்படுகிறது.

இந்நிலைமையானது, எமது தமிழ்த் தலைமைகள் இந்தியாவை தக்கவாறு கையாளவில்லை என்பதையே உணர்த்தி நிற்கிறது.

இந்நிலையில் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள் என சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கேட்டிருப்பது காலத்தின் தேவை கருதியது.

ஆம், தமிழ் அரசியல் தலைவர்கள் அவசரமாக பிரதமர் மோடியைச் சந்திப்பது மிகவும் கட்டாயமானது. அதைச் செய்தே ஆக வேண்டும்.

## 3.9 மில்லியன் குடும்பங்களுக்கு இலவசமாக 10 கிலோ அரிசி

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்

நாட்டில் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்து வாழும் சுமார் 3.9 மில்லியன் குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசியை இலவசமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இவற்றை வழங்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், 2023 ஆம்ஆண்டு பெரும்போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவுத் திட்டம், விவசாயிகளுக்கு அதிக நன்மைகளை வழங்குவதற்கும் பிரதிகூலங்களை குறைக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இயன்றவரை பணத்தைப் பாதுகாக்கும் வகையில், அரிசிக் கொள்வனவு வேலைத்திட்டத்தை இவ்வருடம் முன்னெடுப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

2023 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் அதிக விளைச்சல் கிடைக்கும் என நம்புகிறோம். இதன் விளைவாக, விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நெல் 100 ரூபாவுக்கு கொள்முதல் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## விபரீத முடிவெடுத்த 18 வயது மாணவி மரணம்

சுன்னாகம் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை 9.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் அதே பகுதியைச் சேர்ந்த தங்கமயில் அனோயா (வயது-18) என்ற உயர்தர கலைப்பிரிவு மாணவியே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## சட்டவிரோத கடற்தொழிலை தடைசெய்யுமாறு கோரி

### உடுத்துறை மீனவர்களால் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியில் சட்டவிரோதமான கடற்தொழில்களை தடைசெய்யுமாறு கோரி நேற்று மீனவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த மருதங்கேணி பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் மீனவர்களுடன் சமரசத்தில் ஈடுபட்டனர்.

இதன் அடிப்படையில் இன்றையதினம் குறித்த விடயம் தொடர்பில் ஆராய 55 ஆவது படைப்பிரிவு தலைமையகத்தில் ஒன்றுகூடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதுவரை போராட்டத்தை கைவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் அதனை ஏற்றுக்கொண்ட மீனவர்கள் நேற்று குறித்த எதிர்ப்பு போராட்டத்தை கைவிடுவதாகவும் இன்று ஒரு நல்ல முடிவு ஒன்று தரப்படாத பட்சத்தில் அல்லது எடுக்கப்படாத பட்சத்தில் தம்முடைய போராட்டம் தொடரும் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். (ம-7)

## நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்த சதி - கஞ்சன

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னர், நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த சிலர் சதி செய்வதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

அடுத்த மாதம் 8 மற்றும் 9 ஆம் திகதிக்குள் இவ்வாறான சதிகளை செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது என கூறியுள்ளார்.

ஏழரை மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதையும், இரண்டு மூன்று நாட்களாக மக்கள் வரிசையில் காத்திருந்ததையும் சிலர் மறந்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மின்சார சபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் செலவுகளையும் நிர்வகிக்க வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கனேடிய தூதுவருடன் மாநகர முதல்வர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் அவர்களுக்கும் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக்ஸ் வோல்ஸ் (Eric Walsh) ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பு ஒன்று நேற்று இடம் பெற்றது.

நேற்றைய சந்திப்பில் கருத்து வெளியிட்ட முதல்வர் யாழ்ப்பாணம் மாநகரத்தின் செயற்பாடுகள், முன்னேற்றங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டதுடன் பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மாநகரத்திற்கான பாதாள சாக்கடைத் திட்டம் ஒன்று முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும், இது தொடர்பில் கனடா டொரன்டோ மாநகர முதல்வருடன் ஏற்கனவே 3 வருடங்களுக்கு முன்பு கதைத்திருந்த விடயம் தொடர்பாகவும், அதனை நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 அசாதாரண நிலைமைகள் காரணமாக நடைமுறைப்படுத்த முடியாது போனதாகவும், அதனை மீள ஆராய்வதற்கான நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை கனடா டொரொன்டோ மாநகரத்தின் ஊடாக பெற்றுத்தருவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டார். முதல்வரின் கருத்தை உள்வாங்கிக் கொண்ட தூதுவர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

மேலும் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் ஏற்படுத்தப்படும் தடைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும், மக்களின் நிலைமைகள் தொடர்பிலும் முதல்வர் தூதுவரிடம் விளக்கினார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் கனடா நாட்டின் தூதுவராலயத்தின் அலுவலகம் ஒன்றை அமைப்பது குறித்து பரிசீலிக்குமாறு முதல்வர் தூதுவரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார். குறித்த விடயம் உண்மையிலேயே வரவேற்கத்தக்கது என்றும், இது குறித்து தான் பரிசீலிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7.33)

## அத்தியாவசிய செலவீனங்களுக்கு நிதியை விடுவிக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அரசாங்கத்தின் சில அத்தியாவசிய சேவைகளுக்கு நிதியை வழங்குவதற்கு அமைச்சரவை நேற்று இணக்கம் வெளியிட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கொள்வனவு, நெல் கொள்வனவு, போசாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட செலவீனங்களுக்கும் இவ்வாறு நிதி விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, ஜனாதிபதியின் யோசனையின் பிரகாரம், 2022ஆம் ஆண்டு முதல் 18,000 இற்கும் மேற்பட்ட ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கான ஓய்வூதிய நிலுவைகளை வழங்குவதற்கான நிதியை விடுவிக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலம் இல்லாததால் ஆற்றில் இறங்கி

# ஆபத்தான போக்குவரத்தில் ஈடுபடும் மடுக்கரை மக்கள்

**(கொழும்பு)**

**மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்தில் வசிக்கும் மக்களின் போக்குவரத்து தேவைகளுக்கு பாலம் அமைத்துக் கொடுக்கப்படாததால் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்து மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

மடுக்கரைமுள்ளிமோட்டை கிராமத்தில் 2018 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட 90 குடும்பங்கள் வசிக்கும் இப் பகுதியில் 18 குடும்பங்கள் ஆற்றைக் கடந்து குடியேற்றப்பட்டுள்ளனர்.

வீடுகளுக்கு அருகாமையிலேயே அருவி ஆற்றின் கிளை ஆறு ஓடிக் கொண்டிருப்பதால் தற்காலிக பாலம் கூட அமைத்துக் கொடுக்கப்படாமல் ஆற்றில் இறங்கியே ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

கோடை காலத்தில் ஓரளவு நீர் வற்றிக்காணப்பட்டாலும் மழைக்காலங்களில் ஆற்றில் நீர் நிறைந்து ஓடுவதால் அன்றாட கடமைகளை செய்ய முடியாமல் அப்பகுதி மக்கள் திண்டாடி வருகிறார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த கடும் மழை காரணமாக போக்குவரத்து பிரச்சினையால் அவர்களின் உறவினர்கள் வீடுகளில் வசித்து வருகிறார்கள்.

அப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப் பட்டதில் இருந்து உள்ளக வீதிகள் ஒழுங்காக அமைத்துக் கொடுக்கப்படாமலும் குறித்த ஆற்றினை கடந்து செல்வதற்கு பாலம் அமைத்துக் கொடுக்கப்படாததாலும் அப்பகுதியில் வசிக்கும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்று அனைவரும் அன்றாடப் போக்குவரத்திற்கும் பாடசாலை செல்வதற்கும் அவசர மருத்துவ தேவைகளைப் பெறுவதற்கும் இயலாமல் தவித்து வருகிறார்கள்.

எனவே வடக்கு மாகாண ஆளுநர் எமது கிராமத்து மக்கள்மீது அக்கறை கொண்டு தற்காலிகமாக பாலம் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனமடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்து மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6,285)


## சேல்ஸ்மன் தேவை

எமது பிடவை நிறுவனத்திற்கு பிடவை அனுபவம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர் தேவை. (பழக ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது)

**சிவகணேசன் TEX**

**41, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

(14608)





## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 170 | 180 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 300 | 300 |
| தக்காளி | 250 | 250 | 280 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 280 |
| கோவா | 50 | 60 | 100 | 100 |
| கரட் | 200 | 220 | 220 | 220 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 160 | 200 | 140 | 160 |
| வாழைக்காய் | 200 | 180 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 160 | 200 |
| பாகற்காய் | 250 | 350 | 320 | 400 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 150 |
| பயற்றங்காய் | 600 | 400 | 500 | 600 |
| லீக்ஸ் | 320 | 260 | 250 | 300 |
| பீற்றூட் | 100 | 150 | 140 | 160 |
| கறிமிளகாய் | 700 | 600 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1200 | 2000 |
| போஞ்சி | 300 | 350 | 320 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | — | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 40-100 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 200 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 170 | 200 |
| முள்ளங்கி | 50 | 70 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 120 | — | 120 |

## 02 ஆம் ஆண்டு நினைவலைகளுடன்...

மலர்வு 25 . 06 . 1955

உதிர்வு 06 . 02 . 2021



அமரர்

## சண்முகம் பாலசுந்தரம்

திதி :- நவமி 14.02.2023

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
பாரோடு தவிக்க விட்டு
பாதியிலே போனதேனோ?

உற்றமும் சுற்றமும் கூடிக்களித்த
உறவுகளைக் கைவிட்டு சென்றதேனோ?
கலையாத நினைவுகளுடன்
கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



அம்பன்,
குடத்தனை.

- குடும்பத்தினர்

(C-5960)

## பொது அறிவித்தல்
## வேலணை பிரதேச சபை

கடந்த ஆண்டில் பத்திரிகை ஊடாக அறிவிக்கப்பட்ட 09.11.2022 ஆம் திகதிய விளம்பரத்தின் இலக்கம் 01 பகுதிக்கு மேலதிகமாக, தற்போது, நகர அபிவிருத்தி குழு கூட்ட தீர்மானத்தின் படி படவரைஞரில் **NVQ 04** மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டட படவரைஞர் சான்றிதழ் பெற்றவர்கள் **2023** ஆம் ஆண்டிற்கான பதிவினை கட்டட படவரைஞர்களாக **மாசி 28 ஆம் திகதிக்கு** முன்னர் புதிதாக பதிவதோடு ஏற்கனவே பதிவு செய்தவர்கள் புதுப்பிக்கவும் முடியுமென அறியத்தருகின்றேன்.

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி
தவிசாளர், பிரதேச சபை, வேலணை.

(C-5959)

## மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி
**ஆனந்தஈஸ்வரி இராசரத்தினம்**
(அதிபர், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி)



கல்விப் புலத்தில் ஆசிரியர் சேவை
16.03.1990 - 03.08.2000
அதிபர் சேவை
04.08.2000 - 12.02.2023

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றி 13.02.2023 நேற்று மணிவிழா கண்ட அதிபருக்கு எமது வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர் :- தென்மராட்சி அதிபர் சங்கம்

(C-5961)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கைதடியில்...

நேற்று முன்தினம் இரவு இச்சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுவனின் தந்தை சிறு வனை கண்டித்த நிலையில் குறித்த சிறுவன் நஞ்சருந்தி உயிரை மாய்த் திருப்பதாக முதற்கட்ட விசாரணை களில் தெரிய வருகிறது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோத னைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் கைதடி பிரதேச பாட சாலை ஒன்றில் கல்வி கற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30,33)

## வாள்வெட்டு...

யைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தை யான சண்முகசுந்தரம் யசோதரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மரணவீடு ஒன்றில் இடம்பெற்ற கருத்து முரண்பாடே இந்தச் சம்பவத் திற்கு வழிவகுத்துள்ளது.

15க்கு மேற்பட்டவர்களைக் கொண்ட குழு வாளினால் சரமாரியாக வெட்டி யுள்ளது. இதன்போது படுகாயமடைந்த


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1485
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 7 9 2 0 2 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1060
X 09 18 40 50
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 3272
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
H 12 22 53 54
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 13/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1378
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
B 04 09 13 26 76

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.13
சீட்டிழுப்பு இலக்கம் 339
மகரம் 02 12 15 41 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/13
சீட்டிழுப்பு இலக்கம் 5030
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
E 0 4 9 6 5 3
தேசிய லொத்தர் சபை


ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் தாக்குதல் மேற்கொண்ட குறித்த குழு வைச் சேர்ந்த ஒருவருமாக நால்வர் நோயாளர் காவு வண்டி மூலம் வைத் தியசாலைக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

அவர்களில் ஒருவர் உயிரிழந்த துடன் மேலும் இருவர் அவசர சிகிச் சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை மற்றைய நபர் சந்தேகத்தின் அடிப் படையில் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர். (ம-7,33,100)

## ஆண்...

கள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஈரப்பெரியகுளம் புதிய நகரப் பகுதி யின் காட்டுப்பகுதியிலே இவ் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன் அதே பகுதியில் வசித்து வந்து காணா மல்போன ஒருவரின் சடலமாக இருக் கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியில் வசித்து வந்த 43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜிந்தக்க ராஜபக்ஷ என்ப வர் கடந்த 9 மாதங்களுக்கு முன் காணாமல் போயுள்ளார்.

இது காணாமல்போனவரின் உடல் அங்கங்களாக இருக்கலாம் என பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-7, 250)

## யாழ்.அத்தியடிப்...

அவர் நேற்றைய தினமும் நேற்று முன் தினமும் வந்திருந்தபோது, நான் வீட் டுக்குள் இருந்தேன். அம்மாதான் அவருடன் கதைத்துக்கொண்டு இருந் தார். பிறகு இருவரும் வாக்குவாதப் படுவது கேட்டது, சிறிது நேரத்திற்குள் அம்மா பெரிய சத்தமாக கத்தினார். சத் தம் கேட்டு வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தபோது, அம்மா இரத்த வெள்ளத் தில் கிடந்தார். அந்நபரை அவ்விடத் தில் காணவில்லை என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையின்போது, கொலையானவரின் மகள் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

மரக்கட்டை ஒன்றினால் தாக்கியே பெண் கொலை செய்யப்பட்டுள்ளதாக வும், சந்தேகநபர் தொடர்பிலான தக வல் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற் றின் அடிப்படையில் அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள் ளோம் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33,104)

## 4 தமிழ் அரசியல்...

நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய் யப்பட்டது.

வழக்கின் முதலாவது பிரதிவாதி யான கந்தையா இளங்கோ, 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், முதலாவது பிரதி வாதியால் வழங்கப்பட்டதாகக் கூறப் படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி இடம்பெற்ற உண்மை விளம்பல் விசாரணையின்போது நீதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதை பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் 2009ஆம் ஆண்டு விமா னப் படையால் நடத்தப்பட்ட குண்டு வீச்சு தாக்குதலில் முதலாவது பிரதி வாதி தனது வலது காலை இழந் துள்ளதுடன், 15 வருடங்களாக வழக்கு விசாரணை நிறைவு செய்யப்படாமை குறித்தும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி மன்றுக்கு எடுத்துரைத்துள்ளார்.

விடயங்களை ஆராய்ந்த காலி மேல் நீதிமன்ற நீதிபதி, 04 பிரதிவாதிகளுக் கும் பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

வழக்கு விசாரணையில் பிரதிவாதி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜராகியதுடன், சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலி சிட்டர் ஜெனரல் மொஹமட் பாரி மன் றில் ஆஜராகியிருந்தார். (ம-7)

## பிரபாகரன் உயிரு...

மேலும் அவரது சடலத்தை கருணா அம்மான் அடையாளம் காட்டினார் என்றும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நலமுடன் உள்ளார் என்று உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடு மாறன் உலக தமிழ்மக்களுக்கு கருத்து தெரிவித்திருந்த நிலையில், இந்தத் தகவலை இலங்கை இராணுவம் வெளி யிட்டுள்ளது. (ம-7)

## பிரபாகரன்...

தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத் தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித் துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலி களின் தலைவர் பிரபாகரன் உயி ருடன் நலமாக உள்ளார். பிரபா கரன் நலமுடன் இருப்பது ஈழத் தமிழர் களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

பிரபாகரன் குறித்து தவறான தகவல் பரப்பப் பட்டுவிட்டது. அவ ருடன் தொடர்பில் தான் உள்ளோம். பிரபாகரனின் அனு மதியின் பேரி லேயே செய்தி யாளர்கள் சந் திப்பு நடைபெறு கிறது பிரபா கரனின் மனைவி, மகளும் நலமு டன் உள்ளனர்.

உரிய நேரத் தில் மக்கள் முன் வருவார். பிரபா கரன் எங்கு உள் ளார் என்பது தற் போது அறிவிக்க இயலாது. தமிழக அரசும் மக்களும் பிரபாகரனுக்கு உறுதுணையாக இருக்க வேண் டும்.

இலங்கையில் ராஜபக்ஷக்களின் ஆட்சி முடிவுக்கு வந்திருப்பதால் இந்த அறிவிப்பை வெளியிடுகி றோம்.

இலங்கையில் தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத்துக்கும் இராணுவத்துக்கும் இடையே இடம்பெற்ற யுத்தம் கடந்த 2009ம் ஆண்டு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் இறுதி யுத்தத்தின்போது பிரபாகரன் உயிரிழந்துவிட்டதாக இலங்கை அரசாங் கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பிரபாகரன் குறித்து மாறுபட்ட பல தகவல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின் றன. பிரபாகரன் இறந்தது உண்மை என ஒருதரப்பும் இல்லை, பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என ஒருதரப் பும் கூறி வந்தன.

இதுவரை அவரைப் பற்றித் திட்ட மிட்டுப் பரப்பப்பட்ட யூகங்களுக்கும் ஐயங்களுக்கும் இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்புகிறோம்.

தமிழீழ மக்களின் விடியலுக்கான திட்டத்தை விரைவில் அவர் அறிவிக்க இருக்கிறார். தமிழீழ மக்களும் உல கத் தமிழர்களும் ஒன்றுபட்டு நின்று அவ ருக்கு முழுமையான ஆதரவினை அளிக்க முன் வருமாறு வேண்டு கிறோம் என்றார். (ம-7)

## யாழ்.மாநகர...

டிற்கு இன்று மீண்டும் விசப்பரீட்சை நடக்கிறது.

வரவு-செலவு திட்டத்தை நிறைவேற்று வதில் ஆனல்ட் தரப்பு பகீரதப் பிரயத் தனத்தில் ஈடுபட்டுள்ளது. (ம-7,33)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2005 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.02.13 தினம் திங்கட்கிழமை
B 29 30 51 56
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,749,420/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.13
சீட்டிழுப்பு இல : 4166
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,293,400/-
வெற்றி இலக்கங்கள்
28 39 67 72 Z
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,988,424/-
திகதி 2023-02-13
வெற்றி வாரம் 3717
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 16 33 39 51
7596
392
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,066,564/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 22 05 23 43 61
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1181
வர்ணம் பச்சை
திகதி 2023.02.13 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 305,590,412.20
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1896
சீட்டிழுப்பு திகதி 2023-02-13
வெற்றி இலக்கங்கள்
05 47 64 65 G
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 39,918,542.40
DLB
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1831
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.02.13
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,881,640/-
வெற்றி இலக்கங்கள்
15 23 49 63 F
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்-அஞ்சலி



அமரர் திரு.
**செல்வதயாளரூபன்**

அமரர் திருமதி
**செல்வதயாளரூபன் நாகராணி**

எமது சங்கத்தில் கடமையாற்றிய திரு. செல்வதயாளரூபன் மற்றும் அவரது மனைவி நாகராணி ஆகியோரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்துவிட்டாலும் - நினைவுகள்
எங்கள் இதயத்தில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை..
பாசமான நினைவுகளை எம்மிடம் விட்டுசென்றீர்கள்.!!
உங்கள் ஆத்மா இறையின் பாதங்களில்
சாந்திபெற பிராத்திக்கின்றோம்.
ஓம்சாந்தி!! சாந்தி! சாந்தி!!

தகவல் : லட்சுமி வெதுப்பகம்
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

(14598)


## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-5962)

## சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்

V2 TRAVELS CHOLA FOODS உடன் இணைந்து
புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
(C-5962)

**V2 TRAVELS 0777-068-777**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4 வணிக வளாகங்கள், ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.

நல்ல தண்ணீர், நல்ல சூழல்.

• விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
• தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு :- 076 690 6272

(14577)

## கனடா விசாக்கள்

கனடா நாட்டினை மிகக் குறுகிய காலத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில்செல்ல உடன் தொடர்பு கொள்ளுங்கள்

100% உத்தரவாதம்

**070 461 4192**

(14606)


## தேசிய வெளிக்கள நிலையம், தொண்டைமானாறு

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தொண்டைமானாறு தலைமை அலுவலகத்தில் நடைபெறும். அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிரேரணைகளை 28.02.2023 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக தொண்டைமானாறு, தலைமை அலுவலகம் அல்லது நல்லூரிலுள்ள அலுவலகம் ஆகியவற்றுக்கு தபால் மூலமாகவோ நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.

இ.குகானந்தன்
செயலாளர்
021 222 5414

133, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(14604)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்மலர்ச்செல்வி சிவபாதம்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்மலர்ச்செல்வி சிவபாதம் அவர்கள் (11.02.2023) சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இரத்தினபூபதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவபாதத்தின் அன்பு மனைவியும் யோகலஷ்சுமியின் (லண்டன்) அன்புத் தாயும் சுதர்சனின் (லண்டன்) அன்பு மாமியும் றொக்சனா, ஜெரோன் (லண்டன்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பொன்தாமரைச்செல்வி, அமரர் பொன்சிவசோதி (சுவிஸ்), பொன்மோகனச்செல்வி, பொன்மதிச்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் புஸ்பராசா, சயந்தி (சுவிஸ்), ஜனார்த்தனன், கிருஷ்ணகுமார்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சிவானந்தம் - தவராணி (கனடா), சிவனேஸ்வரி - உதயகுமார் (கனடா), சிவகுமார் - சிவகௌரி (சுவிஸ்), சிவசுந்தர் - சியாமளா (ஜேர்மனி), சிவசங்கர் - சுகந்தினி, சிவரூபன் - புரந்தரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் விஜயன் - லாவண்யா (கனடா), தீபன் - கார்த்திகாயினி (கனடா),றொசாந்தன் -தாரணி(கனடா), டினேசன் - கோபிகா (கனடா), அபினா (கனடா), லக்சன் (கனடா), சிந்துஜா, பலராம் (சுவிஸ்), அபிஷன் (சுவிஸ்), அபினன் (சுவிஸ்), அக்ஷா (சுவிஸ்), அனுஜா (ஜேர்மன்), ஆரணி (ஜேர்மன்), அபினாஷ் (ஜேர்மன்), கஜலக்ஷன், தனுசியா, திவ்யன் (கனடா), அனுஜன் (கனடா), பிரகானன், பிரகர்ஷிகா, கிசோரன், கிருசானு, நயனி, கிசாந் (சுவிஸ்), கயந் (சுவிஸ்) ஆகியோரின் பெரியதாயும் லோஜன் (கனடா), சஜித் (கனடா), பிரவீன் (கனடா), தனுஷன் (கனடா), சிவனுயா, சிவார்த்தி (சுவிஸ்), சிவாரணி (சுவிஸ்), சிவரூபி (சுவிஸ்), சிவசுதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14.02.2023 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாவரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:- நவரத்தினம் சிவபாதம்
(கணவர்) 077 299 3586

(14600)

## கோண்டாவில் மத்திய விளையாட்டு கழகம் நடாத்தும் மென்பந்து சுற்றுப் போட்டிக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

காலம் : 2023.02.12 ஞாயிற்றுக்கிழமை

1 ஆம் பரிசு துவிச்சக்கரவண்டி
கிஷோக்
உரும்பிராய் இல - 1570

2 ஆம் பரிசு கிறைண்டர்
தெ.கனிஸ்ரன்
கோண்டாவில் இல - 947

3 ஆம் பரிசு தொலைபேசி
கு.மேனகா
கோண்டாவில் இல - 1510

நிர்வாக சபை

(14607)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.

(14568) 076 825 7716 (ஆகாஸ்)

# SCIENCE UNIVERSE

## A/L 2022 Repeat Batch

ஆரம்பமாகிறது

◆ PHYSICS
◆ CHEMISTRY
◆ COMBAINED MATHS

Feb 16 முதல்

Time → 7.00 a.m

அனுமதிகள் வழங்கப்படுகின்றன (மட்டுப்படுத்தப்பட்டவை)

077 934 4697 அலுவலகம்

(2023 மாணவர்களும் இணைய முடியும்)

(14603)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org